]1982 பிப்ரவரி 17

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, ஆய்விலே இருக்கிறது. ஓரளவிற்குத் தகவல் இருந்தாலும், திட்டத்தை நிறைவேற்றும்பொழுது அதை அறிவிப்பதுதான் நல்லது என்று நான் கருதுகிறேன். காரணம், இப்பொழுதே பலபேர் இந்தத் திட்டம் இந்தப் பகுதியில் வருகிறதா, அந்தப் பகுதியில் வருகிறதா என்று கேட்டு ஏழை விவசாயிகளிடம் இருக்கின்ற நிலங்களைக் குறைந்த விலைக்கு வாங்கி வைத்துக் கொள்வார்களேயானால் நாம் நினைக்கக் கூடிய அந்தச் சமூக நீதி கிடைக்காமலேகூடப் போய்விடும். ஆகவே, திட்டத்தை நிறைவேற்றும்பொழுது அதை அறிவிப்பதுதான் நல்லது என்று நான் கருதுகிறேன்.

கோதையாறு நீர்பாசனத் திட்டம்

* வினா எண் 237—திரு. பி. முகமது இஸ்மாயில்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கன்னியாகுமரி மாவட்டம் கோதையாறு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் கோழிப்போர்விளை கிளைக் கால்வாய் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலைமை என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பி முகமதுஇஸ்மாயில் :- பேரவைத் தலைவர் அவர்களே, பல வருடங்களாக வற்புறுத்தப்பட்டு வரும் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வதில் என்ன சிரமங்கள் இருக்கின்றன? இது எடுத்துக்கொள்ளப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புவதோடு, இந்தத் திட்டம் இனிமேலாவது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுமா என்பதையும் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : பேரவைத் தலைவர் அவர்களே, கோதையாறு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் கோழிப்போர்விளை கிளைக்கால்வாய் அமைக்கும் திட்டம் பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். ஆனால் ஏற்கனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு பாசனத்தின்கீழ் 64,000 ஏக்கர் ஆயக்கட்டுகளுக்குப் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி நீர்த்தேக்கங்களிலிருந்து பாசனவசதி அளிக்கப்படுகிறது. கடந்த சில வருடங்களாக இந்த நீர்த் தேக்கங்களுக்குப் போதிய நீர் வரத்து ஓரளவுக்குக் குறைந்திருக்கிறது. சில சிரமங்களை நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம், எனவே, இருக்கக்கூடிய

இந்த 64,000 ஏக்கர்களுக்கு நாம் பாசன வசதி கொடுப்பதிலே அதிக கவனம் உடையவர்களாக இருக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் இந்தக் கோதையாறு நீர்ப்பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துகின்ற அந்தத் திட்டத்தை நாம் எடுக்கின்றபொழுது மாண்புமிகு உறுப்பினரவர்கள் எதிர் பார்க்கின்ற அந்தத் திட்டத்தையும் எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது. அதற்கு அரசு ஒரு விரிவான திட்டத்தை இப்பொழுது ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில், கோதையாறு அணையை நவீன படுத்துவதற்காக ரூ.15 கோடி அளவிலே ஒரு முன்னோடி திட்ட அறிக்கை இப்பொழுது நமக்கு கிடைத்திருக்கிறது. அதை எடுத்து நாம் செயல் படுத்தும் போது மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லி யிருக்கக்கூடிய அந்த திட்டத்தையும் கவனத்தில் கொள்ள வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. முகமது இஸ்மாயில் : பேரவைத் தலைவர் அவர்களே' நவீனப் படுத்தும் திட்டம் உடனடியாக மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : நவீனப்படுத்துகின்ற திட்டமென கன்னியாகுமரி மாவட்டத்திலே நாம் 3 திட்டங் களை எடுத்திருக்கிறோம். அதிலே அனந்தனார் வாய்க்காலைப் புதுப்பிக்கும் திட்டத்திற்கு அனுமதி அளித்திருக்கிறோம். அடுத்து இருக்கக்கூடிய திருப்புரப்பு அணைக்கட்டு. அது வலது கால்வாய் விரிவாக்கத் திட்டம். அது ஒன்று தான் ரூ. 47 இலட்சம் என்று குறைந்த அளவிலே உள்ளது. இருக்கக்கூடிய ஒரே திட்டம் கோதையாறு அணையை நவீனப்படுத்துவதுதான். எனவே, அதற்கு முன்னுரிமை கொடுத்து விரைவிலே செயல்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே. கோதையாறு நீர்ப்பாசனத் திட்டத்தை மாடர்னைஸ் செய்யும் நேரத்திலே, எந்த, எந்தப் புதிய கால்வாய் அதற்கு உட்படுத்தப்படும்? அதற்காக எவ்வளவு செலவு ஆகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது? அதன் காரணமாக, எத்தனை ஏக்கர் நிலத்திற்கு அதிகமான நீர் பாசன வசதி கிடைக்கும்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தோராயமான மதிப்பீடுதான். ரூ. 15 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதன் மூலம் 20,000 ஏக்கர்களை நவீனப்படுத்துவதன் மூலம் கிடைக்கக்கூடிய உபரி நீர் எற்கனவே பயன் பெற்று வருகின்ற நிலங்களுக்கு, பாசன வசதியை உறுதிப் படுத்தவும், பாசனப் பற்றாக் குறையைப் போக்கவும் பயன்படும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.